# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:64** **தேதி:15.10.2015**

## JTO தேர்வு மற்றும் பயிற்சி தொடர்பாக….

அன்பார்ந்த தோழர்களே,

02.06.2013 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வில் காலிப்பணியிடங்களை மறு கணக்கீடு செய்வதற்கும், அதன் முடிவுகள் வெளிக் கொணர்வதற்கும், தேர்ச்சி பெற்ற தோழர்களை பயிற்சிக்கு அனுப்புவதிலும் நமது BSNL ஊழியர் சங்கம் தொடர் முயற்சி எடுத்தது அனைவரும் அறிந்ததே.

இதற்கு பின்னர் தற்போது மேலும் அதிகப்படியான கேள்விகள் தவறுதலாக கேட்கப்பட்டிருந்ததையும், விடைகள் சரியாக இல்லாததையும் பல தோழர்கள் நமது மாநில சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இவற்றையெல்லாம் தொகுத்து நமது தமிழ் மாநில சங்கத்தின் சார்பாக அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா மற்றும் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் ஆகியோர் இன்று (15.09.2015) தமிழக தலைமை பொது மேலாளரை சந்தித்து கடிதம் கொடுத்து விவாதித்தனர். அனைத்தையும் கேட்டுக் கொண்ட நமது தலைமை பொது மேலாளர் இது குறித்து பரிசீலித்து உடனடியாக ஆவன செய்வதாக உறுதி கூறி உள்ளார்.

மேலும் இந்த தேர்வில் ST தோழர்களுக்கான இட ஒதுக்கீடு சரியாக அமுலாக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிய போது, இது தொடர்பாக கார்ப்பரேட் அலுவலகத்திற்கு ஒரு விளக்கம் கேட்டு கடிதம் எழுதியுள்ளதாகவும், அதற்கான பதில் கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் உறுதி அளித்துள்ளார். நாமும் நமது மத்திய சங்கத்தின் கவனத்திற்கு இதனை கொண்டு சென்றுள்ளோம். விரைவில் சாதகமான முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

JTO பயிற்சிக்கு செல்லக் கூடிய தோழர்களுக்கு TA அட்வான்ஸ் தேவை என்பதை கேட்டதற்கு, அதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறவில்லை என மாநில நிர்வாகம் தெரிவித்து உள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு நமது அகில இந்திய சங்கத்தின் மூலமாக முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்.**